மூலப்பொருளான செம்மண் எடுக்க கனிமவளத்துறை தடை

செங்கல் உற்பத்தியை நம்பி இருக்கும் 10,000 தொழிலாளர்கள் பாதிப்பு

“ அரசு மற்றும் கனிம வளத்துறையின் இந்த நடவடிக்கையால் கை சூளை மூலம் செங்கல் உற்பத்தி செய்வது அடியோடு நின்று போனது. இதனால் தங்களது வாழ்வாதாரத்தை 99 சதவீதம் இழந்துள்ள இத்தொழிலை நம்பி இருந்த தொழிலாளர்கள் வேறு தொழில் தெரியாததால் குடும்பத்துடன் கஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் ”

தாராபுரம், ஆக.28: திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மற்றும் இதனை சுற்றிலும் உள்ள கிராமப் பகுதிகளில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் கை சூளை செங்கல் கற்கள் தயாரிப்பு தொழில் நடந்து வருகிறது. கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக ஏழை நடுத்தர கூலித் தொழிலாளர்களால் குடிசைத் தொழிலாக அங்கீகரிக்கப்பட்டு இந்த செங்கல் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. செம்மண், வண்டல் மண், கரிசல் மண், கலவையைக் கொண்டு சூளை ஒன்றுக்கு அதிகபட்சம் 30 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வந்த இந்த கை சூளை செங்கல் தயாரிப்பில் உள்ளூர் கிராம கூலித் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் செங்கல்பட்டு, வந்தவாசி, கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதியை சார்ந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் குடும்பத்துடன் தங்க வைக்கப்பட்டு தொழில் செய்து வந்தனர்.

கை சூளைச் செங்கல் மூலம் கட்டப்படும் கட்டிடங்கள் உறுதித் தன்மையுடன் காணப்படும் என்றும், மழை, வெயில் போன்ற பருவ மாற்றங்களின்போது அவற்றை வைத்து கட்டப்படும் வீடுகள் வெயில் காலத்தில் குளிர்ச்சியையும், குளிர்காலத்தில் கதகதப்பான வெப்பத்தையும் வீடுகளுக்குள் நிலை நிறுத்தி வைக்கும் என்றும் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் வந்தவாசி, கோவை தடாகம் பகுதிகளில் தயாரிக்கப்படும் கை சூளை செங்கல்களுக்கு அடுத்தபடியாக திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சூளை செங்கல்களுக்கு கட்டுமான பொறியாளர்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வந்தது. இதனால் செங்கல் தயாரிப்பு மற்றும் கட்டுமான தொழிலை நம்பி இருந்த 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தங்கள் வாழ்வாதாரத் தொழிலாக இதில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக செங்கல் உற்பத்திக்கான செம்மண், கரிசல் மண், ஆறு, குளங்களின் ஓரம் தேங்கி கிடக்கும் வண்டல் மண் உள்ளிட்டவைகளை எடுக்க அரசு தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது. இதைத்தொடர்ந்து மாவட்ட கனிம கை சூளை செங்கல் தயாரிப்புக்கு தேவையான மண் எடுத்துச் செல்ல கடுமையான தடை விதித்தது. அரசு மற்றும் கனிம வளத்துறையின் இந்த நடவடிக்கையால் கை சூளை மூலம் செங்கல் உற்பத்தி செய்வது அடியோடு நின்று போனது. இதனால் தங்களது வாழ்வாதாரத்தை 99 சதவீதம் இழந்துள்ள இத்தொழிலை நம்பி இருந்த தொழிலாளர்கள் வேறு தொழில் தெரியாததால் குடும்பத்துடன் கஷ்டமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து கை சூளை செங்கல் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த வெளி மாவட்டத்தைச் சார்ந்த தொழிலாளி பாண்டியன் என்பவர் கூறுகையில், “செங்கல் தயாரிப்பு தொழில் மட்டுமே தெரிந்த நாங்கள் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன் சேலம் பகுதியில் இருந்து குழந்தைகளுடன் குடும்பமாக குடிபெயர்ந்து தாராபுரம் பகுதியில் குடிசைத் தொழிலான கை சூளை செங்கல் தயாரித்து கொடுத்து வந்தோம். இதன்மூலம் எங்களது குடும்பத்தில் உள்ள 3 குழந்தைகளுக்கு கல்வியுடன் வயிறார உணவும் கிடைத்து வந்தது. கடந்த சில மாதங்களாக அரசாங்கம் செங்கல் தயாரிப்புக்கான மண் எடுக்க தடை விதித்துவிட்டது. இதனால் ஏற்கனவே சேமித்து வைத்திருந்த குறைந்த அளவிலான மண்ணை வைத்து வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கும்.

இதன் மூலம் கிடைக்கும் தொகையை வைத்துதான் நாங்கள் பசியை போக்க வேண்டி உள்ளது. எங்களைப்போல செங்கலை வைத்து கட்டிடம் கட்டும் தொழிலை நம்பி உள்ளவர்களும் செங்கல் தயாரிப்பு தொழிலை நம்பி உள்ளவர்களும் என சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தாராபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ளனர். அவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி இருக்கிறார்கள். செங்கல் உற்பத்திக்கான மண் எடுக்க அரசாங்கம் அனுமதி அளித்தால் மட்டுமே எங்களது பிரச்னைக்கு தீர்வு ஏற்படும்” என்றார்

அமைச்சரிடம் கோரிக்கை

தாராபுரம் கை சூளை செங்கல் கற்கள் உற்பத்தியாளர் சங்க தலைவர் கோவிந்தசாமி தலைமையில் செங்கல் உற்பத்தியாளர்கள் 20க்கும் மேற்பட்டோர் தவெக தென் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சத்தியபாமாவை நேரில் சந்தித்து தங்களது கை சூளை செங்கல் தயாரிப்புக்கு தேவையான மண் எடுக்க அரசு விதித்துள்ள தடையை தளர்வு செய்ய கோரிக்கை மனுவை அளித்துள்ளனர். செங்கல் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவை உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கையை விரைந்து எடுப்பதாக சத்தியபாமா நம்பிக்கை தெரிவித்தார்.

திருப்பூர் ஜெய்வாபாய் பள்ளியில்

அரசு பள்ளி மாணவிகளுக்கு நோய் எதிர்ப்பு தடுப்பூசி

திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு நோய் எதிர்ப்பு தடுப்பூசி போடும் பணி நேற்று நடைபெற்றது.

திருப்பூர், ஆக. 28: திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும் தடுப்பூசி முகாம் நேற்று நடைபெற்றது. பள்ளி கல்வித்துறை முகாம் மற்றும் சுகாதாரத் துறை இணைந்து நடத்திய இந்த முகாமில், தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்தும், பருவமழைக் காலங்களில் பரவும் தொற்று நோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் ஏராளமான மாணவிகள் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

முதற்கட்டமாக கடந்த வாரம் 300 மாணவிகளுக்கும், நேற்று 200 மாணவிகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்லடம் அருகே அருள்புரத்தில்

போலீஸ் நிலையம் அமைக்கப்படுமா?

திருப்பூர், ஆக. 28: பல்லடம் அருகே அருள்புரத்தில் போலீஸ் நிலையம் அமைக்க வேண்டும் என பொதுமக்களுக்கும், சமூக ஆர்வலர்களும், பல்வேறு அமைப்புகளும் அரசியல் கட்சியினரும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்லடம் உட்கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் 4 போலீஸ் நிலையம், ஒரு மகளிர் போலீஸ் நிலையம், மற்றும் ஒரு போக்குவரத்து போலீஸ் நிலையம் ஆகியவை உள்ளன. பல்லடம் போலீஸ் நிலையப்பகுதி அதிக மக்கள் தொகை மற்றும் தொழில் நிறுவனங்கள் கொண்ட பகுதியாகும். இந்த போலீஸ் நிலையத்தில் 80 போலீசார் பணியாற்றி வருகின்றனர். இதில் தினந்தோறும் 20 போலீசார் மாற்று பணிகளுக்கு சென்றுவிடுதால் 60 போலீசார் மட்டுமே பல்லடம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர். பல்லடம் போலீஸ் நிலையத்தின் கீழ் பல்லடம் நகர் பகுதிகள் மற்றும் 12 கிராமங்கள், 84 குக்கிராமங்கள் என மொத்தம் 96 கிராமங்களை உள்ளடக்கியது.

பல்லடம் போலீஸ் நிலையத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அருள்புரம். அருகில் கரைப்புதூர், கணபதிபாளையம், ஆறுமுத்தாம்பாளையம் ஆகிய ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். திருப்பூர் மாநகராட்சிக்கு அருகில் அமைந்துள்ளதால் இங்கு அதிகமான தொழில் நிறுவனங்கள், சாய ஆலைகள், மற்றும் தொழில்களை சார்ந்து பல நிறுவனங்கள் இயங்குகின்றன. வடமாநில தொழிலாளர்கள் மற்றும் தென் மாவட்டங்களை சார்ந்த பொதுமக்கள் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். தொழில் நிறுவனங்களில் அதிக அளவில் பெண்கள் வேலை செய்வதால் அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாய நிலை உள்ளது.

இந்த பகுதி பல்வேறு சமூக விரோத சம்பவங்களும், குற்றச்சம்பவங்களும் அதிக அளவில் நடைபெறும் பகுதிகளாகும். இதற்கு பல்லடம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்ய வேண்டும். பல்லடம் போலீசார் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதிகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் எளிதில் தப்பித்துச்சென்று விடுகின்றனர். குற்றவாளிகளை கண்டறிய பல்லடம் போலீசாருக்கு பெரும் சவாலாக இருக்கிறது. மேலும் இந்த பகுதி மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் தினந்தோறும் லட்சக்கணக்கான வாகனங்கள் செல்வதால் சாலை விபத்துக்களும் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. அருள்புரம் பகுதியில் போலீஸ் நிலையம் அமைந்தால் பகல், இரவு ரோந்து பணியில் ஈடுபட்டு குற்றச் சம்பவங்களை தடுக்கவும், சாலையில் செல்லும் வாகனங்களை கண்காணித்து சாலை விபத்துகளை கட்டுப்படுத்தவும் முடியும்.

இதனால் அருள்புரத்தில் போலீஸ் நிலையம் அமைக்க வேண்டும் என பல்வேறு அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும், அரசியல் கட்சியினரும் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து மாவட்ட கலெக்டர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு பலமுறை மனு கொடுத்தும் கடந்த 8 ஆண்டுகளாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் அருள்புரத்தில் போலீஸ் நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியாகுமா? என்ற எதிர்பார்ப்பு அனைத்து தரப்பினரின் மத்தியிலும் எழுந்துள்ளது. தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் வகையில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் என அனைவரும் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அனைத்து தரப்பினரின் மிகுந்த எதிர்பார்ப்பாக உள்ளது.

தாராபுரத்தை அடுத்த சின்ன மருதூர் கிராமத்தில்

கிரசர் ஜல்லி குவாரி, தார் கலவை தொழிற்சாலைக்கு மக்கள் எதிர்ப்பு

அனுமதி உத்தரவை ரத்து செய்யாவிட்டால் போராட்டம் என அறிவிப்பு

தாராபுரத்தை அடுத்த கம்பளியம்பட்டி, சின்ன மருதூர் கிராம மக்கள் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கோட்டாட்சியரிடம் புகார் மனு கொடுத்தனர்.

தாராபுரம் ஆக 28: தாராபுரத்தை அடுத்த கம்பளியம்பட்டி ஊராட்சி சின்ன மருதூர், குருணை கல்பட்டி தூங்கவலசு, சத்திரம் உள்ளிட்ட 10 கிராமங்களில் வசிக்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம மக்களின் சார்பில் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் திரண்டு முற்றுகையிட்டு புகார் மனு ஒன்றை அளித்தனர் அதில் கூறியிருப்பதாவது: தாராபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட கம்பளியம்பட்டி ஊராட்சி சின்ன மருதூர் கிராமத்தில் கொள்ளு மேடு, சந்திர முக்கு என்ற இடங்களின் அருகே 10 ஏக்கர் விவசாய நிலத்தில் ஜல்லி கற்களை உடைக்கும் கிரசர் குவாரி மற்றும் சாலைகள் அமைக்க பயன்படுத்தப்படும் தார் கலவை தொழிற்சாலை துவங்க 2 தனியார் நிறுவனங்கள் மாவட்ட வருவாய்த்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு துறை, சுரங்கம் மற்றும் கனிமவளத்துறையிடம் அனுமதி சான்றிதழ் பெற்றுள்ளனர்.

இதற்காக கிராம மக்கள் அனைவரும் ஒப்புதல் தெரிவித்ததாக தவறான தகவல்கள் போலியான கடிதங்களை கொடுத்து தடையின்மை சான்று பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. இது சம்பந்தமாக கிரஷர் மற்றும் தார் தொழிற்சாலை அமைய இருக்கும் கிராமங்களை சார்ந்த பொதுமக்களிடம் யாரும் எப்போதும் எந்த ஒப்புதல் கடிதமும் பெறவில்லை. தனியார் நிறுவனம் அரசாங்கத்திடம் தவறான தகவல் கூறி ஏமாற்றி தங்கள் தொழிலை துவங்க ஒப்புதல் பெற்றுள்ளனர் எங்களது கிராமப் பகுதியில் இந்த தொழில் கூடங்கள் அமைந்தால் முற்றிலும் விவசாயத்தையே நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும். விவசாய பூமிகள், விவசாய பயிர்களின் மீது கற்களை உடைத்து வெடிவைத்து தகர்க்கும்போதும், தார் தொழிற்சாலையில் தாரை காய்ச்சி பதப்படுத்தும்போதும் அதிலிருந்து பரவும் ரசாயன துகள்கள், மண் துகள்கள் விளை பொருட்கள் உற்பத்தியை பாதிக்கும்.

கால்நடைகள் அதற்கான மேய்ச்சல் நிலங்களில் மேய இயலாதவாறு தடை ஏற்படுத்தப்படும். பொதுமக்களுக்கு சுவாச பிரச்னைகள், தோல் நோய் பிரச்னைகள் ஏற்படுவதுடன் நிலத்தடி நீரும் கடுமையாக பாதிக்கப்படும். ஏற்கனவே கம்பளியம்பட்டி ஊராட்சி பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துபோய் குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை உள்ளது. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களும் காய்ந்து கருகி உள்ளன. இதுபோன்ற சூழ்நிலையில் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை முழுவதுமாக சீர்குலைக்கும் கல்குவாரி, ஜல்லி, கிரசர் தொழிற்சாலை, தார் கலவை தொழிற்சாலை துவங்க அரசு துறைகளில் சார்பில் வழங்கப்பட்ட அனுமதி சான்றுகளை உடனே ரத்து செய்து வாபஸ் பெற வேண்டும்.

பொது மக்களிடம் கலந்து ஆலோசிக்காமல் அரசுத்துறை அதிகாரிகளின் தன்னிச்சையான செயலால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே தொழிற்சாலைகள் துவங்க அரசு உடனே தடை விதிக்காவிட்டால் பொதுமக்களை திரட்டி மிகப்பெரிய போராட்டங்களை நடத்துவதாக திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு கிராம மக்கள் தங்கள் புகார் மனுவில் கூறி உள்ளனர். இந்த புகார் மனுவை தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜாவிடம் கொடுத்தனர். கிராம மக்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட அவர் பிரச்னைக்குரிய இடத்தை தாசில்தார் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்வார்கள் என்றும், மாவட்ட கலெக்டரிடம் இந்த பிரச்னை குறித்து விரிவாக பேசி விரைவில் கிராம மக்களுக்கு தகவல் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

வட மாநில தொழிலாளியிடம் செல்போன் பறித்த வாலிபர் கைது

திருப்பூர், ஆக. 28: ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர் ராகேஷ் மாலி (24). இவர் திருப்பூர், கொங்கு மெயின் ரோட்டில் தங்கி ஜவுளிக்கடையில் பணியாற்றி வருகிறார். இவர் கடந்த 15ம் தேதி திருப்பூர் கொங்கு மெயின் ரோடு ஓம் சக்தி கோயில் அருகே செல்போனில் பேசியபடி ரோட்டோரம் நடந்து சென்றுள்ளார். அப்போது பின்னால் பைக்கில் வந்த வாலிபர் ராகேஷ் மாலியின் செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். இது குறித்து ராகேஷ் மாலி வடக்கு குற்றப்பிரிவு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இந்த நிலையில் செல்போன் பறித்தது திருப்பூர் போயம்பாளையம் அடுத்த சக்தி தியேட்டர் ரோடு பகுதியை சேர்ந்த அபய சிம்மா (23) என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து செல்போனை மீட்டனர்.

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: ஐந்தாவது தளம், டவர் 3, விங் B, கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு), மும்பை-400 070.
பிராந்திய அலுவலக இடம்: எண்.19, 7 ஆவது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை-600017.

nido HOME FINANCE

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக) [விதி 8(1)]

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் M/s. நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 (2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13 (12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி **10.09.2024** தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர் விஜயகுமார் P மற்றும் உப கடன்தாரர் மயிலாத்தாள் பழனிசாமி மற்றும் விஜயலட்சுமி S ஆகியோர் அறிவிப்பில் குறிப்பிட்ட திருப்பிச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.5,30,115/– (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பதாயிரத்து நூற்று பதினைந்து மட்டும்) என்ற அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள் 2002 இன் விதி (8) உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை **தலைமை நீதித்துறை நீதிபதி (திருப்பூர்)** வழக்கு எண்.2241 of 2026 இல் உள்ள வழக்கிற்காக 13.08.2026 தேதியன்று பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்த நீதிமன்ற கமிஷனராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலமாக 25, ஆகஸ்ட் 2026 ஆம் நாளில் நேரடி சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்குக் குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது, சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) ரூ.5,30,115/– (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பதாயிரத்து நூற்று பதினைந்து மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டியுடனான தொகையுடன் தொடர்பு உடையதாகும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் இதன்மூலம் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

சொத்தின் அட்டவணை:

இனம்: 1 திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், புங்கமுத்தூர் கிராமம், S.F.No.240/2 (கரட்டூர் நத்தம்) இல் உள்ள காலி வீட்டு மனை. இதன் எல்லைகள் பின்வருமாறு:– வடக்கில்: கீழே குறிப்பிடப்பட்டுள்ள முன்புற முற்றம்; தெற்கில்: மகாலி என்பவரின் வீட்டு மனை மற்றும் முன்புற முற்றம்; கிழக்கில்: K.பழனி நாவிதன் என்பவரின் வீட்டு முன்புற முற்றம்; மேற்கில்: V.குப்பசாமி கவுண்டர் என்பவரின் வீட்டுச் சொத்து. **இதனிடையே அளவீடு:** வடக்கு தெற்காக மேற்கில்: 18 ½ அடி; வடக்கு தெற்காக கிழக்கில்: 23 ½ அடி; கிழக்கு மேற்காக தெற்கில்: 32 ½ அடி; கிழக்கு மேற்காக வடக்கில்: 33 அடி; மொத்தம் 687 சதுர அடி நிலம், கதவு எண் 4/20.

இனம்: 2 வடக்கில்: மேலே குறிப்பிடப்பட்ட வீட்டு மனை; தெற்கில்: மகாலி என்பவருக்குச் சொந்தமான வீட்டு மனை; கிழக்கில்: K.பழனி நாவிதன் என்பவரின் வீட்டுப் பின்புற முற்றம்; மேற்கில்: V.குப்புசாமி கவுண்டர் என்பவருக்குச் சொந்தமான காம்பவுண்ட் சுவர். **இதனிடையே அளவீடு:** வடக்கு தெற்காக மேற்கில்: 17 ½ அடி; வடக்கு தெற்காக கிழக்கில்: 23 ½ அடி; கிழக்கு மேற்காக தெற்கில்: 33 அடி; கிழக்கு மேற்காக வடக்கில்: 22 ½ அடி; மொத்தம் 560 சதுர அடி நிலம்.

இனம்: 3: வடக்கில்: சுப்ப வண்ணான் என்பவரின் வீட்டுச் சொத்து; தெற்கில்: மேலே குறிப்பிடப்பட்ட வீட்டு மனை; கிழக்கில்:K.பழனி நாவிதன் என்பவரின் வீட்டு முன்புற முற்றம்; மேற்கில்:சுப்ப வண்ணான் என்பவரின் வீட்டுச் சொத்து மற்றும் கிழக்கு நோக்கிச் செல்லும் பொதுவான வழிப்பாதை. **இதனிடையே அளவீடு:** வடக்கு தெற்காக மேற்கில்: 23 அடி; வடக்கு தெற்காக கிழக்கில்: 23 அடி; கிழக்கு மேற்காக தெற்கில்: 22 அடி; கிழக்கு மேற்காக வடக்கில்: 25 ½ அடி; மொத்தம் 528 சதுர அடி. மொத்தம் 1775 சதுர அடி நிலம் மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளும் இதில் அடங்கும்.

இடம்: திருப்பூர்
தேதி: 25.08.2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக,
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: கிங்க்ஸ்டோன் பார்க் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017 (TN)

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக 16.09.2026 தேதியன்று மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் /கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2	கடன் எண் HL0011810000000 5053784 மஹமத் தத்தாகிர் (கடன்தாரர்), அஃப்ரின் பானு (உப கடன்தாரர்)	கோரிக்கை அறிவிப்பு தேதி: 10.05.2025 மொத்த நிலுவைத் தொகை: 10.05.2025 தேதியின்படி ரூ.7,69,605/– (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஐந்து மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.6% கூடுதல் வட்டியும் சேர்த்து.	கையக	திருப்பூர் பதிவு மாவட்டம், காங்கேயம் சார்பதிவு மாவட்டம், காங்கேயம் தாலுகா, கணபதிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த R.S.No.230/2, பரப்பளவு 2.05.0 ஹெக்டேர் (பழைய SF No.243/2, பரப்பளவு 7.69 ஏக்கர்), இதிலடங்கிய பரப்பளவு 3.26 ஏக்கர், R.S.No.230/3, பரப்பளவு 2.49.1/2 ஏக்கர் (பழைய SF No.243/2, பரப்பளவு 7.69 ஏக்கர்), R.S.No.229/2, பரப்பளவு 7.28.1/2 ஏக்கர் (பழைய S.F.No.248, 246), R.S.No.232, பரப்பளவு 3.72 ஏக்கர் (பழைய S.F.No.245), RS எண் 233, பரப்பளவு 12.55 ஏக்கர் (பழைய S.F.No. 245, 247), R.S.No.234/2, பரப்பளவு 1.79.5 ஹெக்டேர் (பழைய S.F.No.252/A, பரப்பளவு 4.87 ஏக்கர்), மொத்தப் பரப்பளவு 34.18 ஏக்கர் கொண்ட நிலங்கள் ''ரோஸ் கார்டன்'' எனப் பெயரிடப்பட்டு ஒரு லேஅவுட்டாகப் பிரிக்கப்பட்டு, இதிலடங்கிய 'B' பிளாக், மனை எண் 462 வடக்குப் பாகம், பரப்பளவு 600 சதுர அடி மற்றும் கட்டப்படவிருக்கும் கட்டடம் உட்பட. இது பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது.	Rs. 350000.00/- (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	Rs. 35000.00/- (ரூபாய் முப்பத் தைந்தாயிரம் மட்டும்)	15-09-2026 Before 5 PM	10,000/-	09-09-2026 (11AM – 4PM)	16-09-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், குர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக 'க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரசீட்ஸ் கணக்கில்', வங்கி: ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பஞ்சசீல் டெக் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமான் நகர், –411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 15.09.2026 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிங்க்ஸ்டோன் பார்க் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத் தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 28.08.2026, இடம்: தமிழ்நாடு — ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்